# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜுலை 28, 2024

Weekly E-paper • July 28, 2024




## ‘கருஞ்சட்டை விருது’ மூன்றாம் ஆண்டு விழா!

## இளைஞர்களே எச்சரிக்கை!

காசு.நாகராசன்

## ஜாடிக்கேற்ற மூடி

தலையங்கம்

## 2024-25 ஒன்றிய நிதி நிலை அறிக்கை!


சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜுலை 28, 2024 Weekly E-paper ● July 28, 2024


## ‘கருஞ்சட்டை விருது’ மூன்றாம் ஆண்டு விழா!



திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் மூன்றாம் ஆண்டு "கருஞ்சட்டை விருது" வழங்கும் விழா 27.07.2024 அன்று சென்னை அன்பகத்தில் துணைத் தலைவர் செல்வின் சௌந்தர்ராஜன் தலைமையில் நடைபெற்றது. பேரவைத் தலைவர் தோழர் சுப.வீரபாண்டியன் நோக்கவுரை ஆற்றினார். பொள்ளாச்சி மா. உமாபதி, புலவர் வெற்றியழகன், வாலாசா வல்லவன் ஆகியோருக்கு கருஞ்சட்டை விருதுகளையும், "சாக்ரடீஸ் ஸ்டூடியோ" பேராசிரியர் முரளி, "இவன் இந்திரன்" இராஜ்குமார், "எனவே பேசுவோம்" இஷானா ஆகியோருக்கு சமூக ஊடக கருஞ்சட்டை விருதுகளையும் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கி சிறப்புரையாற்றினார்.

அமைச்சர் தனது உரையில் "கருஞ்சட்டையே ஒரு விருது தான். விருதாளர்கள் தொடர்ந்து தமிழ்ச் சமுதாயத்திற்கு பணியாற்றிட வேண்டும். நானும் கருஞ்சட்டைக்காரன் என்பதால் பாசிசத்தை வேரறுக்க நாம் இணைந்து செயலாற்றுவோம்" என்று குறிப்பிட்டார். எழுத்தாளர் சூர்யா சேவியர் விருதாளர்களை பாராட்டி உரையாற்றினார். விருதாளர்கள் ஏற்புரையாற்றினர்.

பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், துணைத் தலைவர்கள் சிங்கராயர், மகாலட்சுமி, பொருளாளர் எழில். இளங்கோவன், துணைப் பொதுச் செயலாளர் கா.சு.நாகராஜன், தோழர்கள் பெல் இராசன், லாரன்ஸ், அ.இல.சிந்தா, முத்தையா குமரன், மாறன், சந்தானம், நெல்லை பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைப் பொதுச் செயலாளர் இரா. உமா வரவேற்புரையாற்றினார். துணைப் பொதுச் செயலாளர் இராம. வைரமுத்து தொகுப்புரை வழங்கினார். தலைமை நிலையச் செயலாளர் நன்றியுரையாற்றினார்



# இளைஞர்களே எச்சரிக்கை!

காசு. நாகராசன்

"நம்மீது திணிக்கப் பட்டுள்ள இந்த மூவர்ணக்கொடி நமக்குச் சொந்தமாகாது. விதியின் உதையால் ஆட்சிக்கு வந்தவர்கள் மூவர்ணக் கொடியை நம் கைகளில் கொடுக்கலாம். ஆனால் அது நம்மால் மதிக்கப்படாது. மூன்று வண்ணங்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. அது உளவியல் ரீதியாக மோசமான விளைவுகளைக் கொடுக்கும்!"

இப்படிச் சொன்ன தேசபக்தர்கள் யாராக இருக்க முடியும்? சாட்சாத் நம்ம ராஷ்டிரிய சுயம்சேவாக் சங்கம்தான். எங்கே சொன்னார்கள்?

போகிற போக்கில், "ஸுக்லாப்ரதம் ஸஸி வர்ணம்..." என்பதுபோல உளறிவிட்டுப் போகவில்லை. ஆர்.எஸ்.எஸ் இன் அதிகாரப்பூர்வ ஏடான 'ஆர்கனைசர் ' இதழில்தான் இவ்வாறு குறிப்பிட்டு இருக்கிறார்கள்.



அய்யய்யோ அது பெரிய தேசபக்தி இயக்கமாச்சே... இந்திய தேசியக் கொடி பற்றியா இப்படிக் கேவலமாகப் பேசியிருக்கிறார்கள்? சந்தேகமாக இருக்கிறதே...! என்று கவலைப்படுகிற சூத்திர பஞ்சம இந்துக்கள் .....

அதுயாரு சூத்திர பஞ்சம இந்துக்கள்?

அட நாமதான். நம்மை நாமே ஆண்ட பரம்பரைனு சொல்லிக்கிட்டாலும் இந்து வேத சாஸ்த்திர சனாதான தர்மப்படி பார்ப்பனரல்லாத சமூக மக்கள் எல்லோரும்..... பார்ப்பானின் அதிகாரப்பூர்வமற்ற தொடர்பால் அதாவது 'இல்லீகல் காண்டக்ட்ஸ்' மூலமாகப் பிறந்த ஸூத்ராஸ், என்கிறது வேதம்.

"இல்லையில்லை இதை நாங்கள் ஏற்கமாட்டோம். நாங்கள் ஸூத்ராஸ் இல்லே.."

"அப்படியா...? அப்ப நீ ஸூத்ராஸ்க்கும் கீழே பஞ்சமன்!"

சரி இதெல்லாம் இருக்கட்டும். இப்போதான் ஸூத்ராஸ் பஞ்சமாஸ் எல்லோரும் தங்களைத் தாங்களே ஆண்ட சாதிப் பெருமைக்குள் திணித்துக் கொண்டும் வெட்டிக் கொண்டும் நாசமாய்ப் போகிறோமே, அது ஒரு பக்கம் இருக்கட்டும். ஆர்.எஸ்.எஸ் இன் அடுத்த தேசபக்தி ஒழுக்கம் பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டாமா?

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முக்கியமான பக்கங்களில், ஒன்று 1930 களில் தீவிரமடைந்த 'ஒத்துழையாமை இயக்கம்', இன்னொன்று 1942 இல் வலுப்பெற்ற ' வெள்ளையனே வெளியேறு' இயக்கம்.

இந்த இரண்டிலும் நம்ம தேசபக்த ஆர். எஸ். எஸ் தீவிரம் காட்டியிருக்குமே....? ஆமாம்... நிச்சயமாக! எப்படி?

சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளில் இருந்து ஆர்.எஸ்.எஸ் ஒதுங்கியே இருந்தது. குறிப்பாக, "ஆங்கிலேயருக்கு எதிரான எந்தவொரு அரசியல் நடவடிக்கையையும் ஆர்.எஸ்.எஸ். மேற்கொள்ளாது!" என்பதே ஆர்.எஸ். எஸ் இன் நிறுவனர் கேசவ் பலிராம் ஹெட்கேவரின் உறுதியான நிலைப்பாடு என்று ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் வரலாற்று ஆசிரியர் சி.பி.பிஷிகர் சொல்கிறார்.

ஆச்சர்யமா இருக்கே! " நாட்டு மக்கள் அனைவரும் தேசத்திற்காக உழைக்க வேண்டும்!" என்கிற ஆர். எஸ். எஸ் இயக்கமா இப்படி? என்று நம்ம ஆட்களுக்குத் தோன்றலாம். ஆமாம். இப்போதும் ஆர்.எஸ்.எஸ் இதையேதான் சொல்கிறது. ஆனால்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஜாடிக்கேற்ற மூடி

நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர் ராகுல்காந்தியைச் சந்திக்க அவரின் நாடாளுமன்ற வளாக அலுவலகத்திற்குச் சென்ற விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளை சந்திக்க அனுமதி மறுத்துவிட்டது ஒன்றிய அரசு.

மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெற வேண்டும், வேளாண் பயிர்களுக்குக் குறைந்தபட்ச விலையை உறுதிசெய்யச் சட்டம் இயற்ற வேண்டும் என்று 2020-21ஆண்டுகளில் விவசாயிகள் நடத்திய டிராக்டர் போராட்டத்தால், வேறு வழியின்றி அவர்களின் கோரிக்கையை ஒன்றிய அரசு ஏற்றது.

ஆனால் தற்போதுவரை அந்த கோரிக்கையைக் கண்டு கொள்ளவில்லை.

எனவே ஆகஸ்ட் 15 அன்று புதிய குற்றவியல் சட்ட நகல்களை எரிப்பதோடு மீண்டும் டிராக்டர் போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்த வேளாண் சங்கங்கள், இதுகுறித்துத் தனிநபர் மசோதா கொண்டுவர வேண்டும் என்று கோரியுள்ளனர் ராகுல் காந்தியிடம்.

இது ஒரு புறம் இருக்க ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் பாஜக தனது இரண்டு கூட்டாளிகளுக்குச்

சாமரம் வீசியதன் விளைவாக எதிர்கட்சிகளின் 'இந்தியா' கூட்டணியினர் நாடாளு மன்றத்தில் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். பீகார், ஆந்திரா தவிர ஏனைய எதிர்கட்சி மாநிலங்களை நிதிநிலை அறிக்கை புறக்கணித்து உள்ளது.

நிதி ஒதுக்கித் திட்டங்கள் அறிவிக்கும் போது அந்த மாநிலத்தின் பெயரைக் குறிப்பிடுவது இயல்பு. அந்த வகையில் ஏன் தமிழ்நாடு என்ற பெயர் வரவில்லை என்று கேட்பது நமது உரிமை.

ஆனால் பா.ம. க அன்புமணி "தமிழ்நாடு என்ற பெயர் வரவேண்டும் என்றால் 25 எம்.பி. களையாவது அனுப்பி இருக்க வேண்டும்" என்று அதிமேதாவியாக தமிழ் மக்களைக் கேலி பேசி இருக்கிறார்.

விவசாயிகளைத் தலைமேல் வைத்துப் பேசுவார், அன்புமணி. விவசாயிகளைத் திரும்பியும் பார்க்க மாட்டார், மோடி.

இந்த ஜாடிக்கேற்ற மூடிகளிடம் "குடி உயராமல் கோன் உயராது" என்று யார்தான் சொல்வார்களோ?

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

எந்த மக்கள்? அதான் உழைப்பதற்கென்றே ஒரு ஜாதியை வெச்சிருக்கோமே .....ஸூத்ராஸ். அவாதான் தேசபக்தியோடு உழைக்க வேண்டும். அதாவது ஆர்.எஸ்.எஸ் இன் அடியாட்களாக இருக்கிற கூட்டத்திற்குத் தான் தேசபக்தி. அதன் தலைமையை எப்போதும் அலங்கரித்துக் கொண்டிருக்கிற சித்பவன் பார்ப்பனர்களுக்கு தேசபக்தி, தெய்வ பக்தி என்பதெல்லாம் சாதாரணம். அதுமட்டுமல்ல அவர்களுக்கு மனிதத் தன்மையே வெகு தூரம்.

இந்து முஸ்லீம் கலவரம், பாக்கிஸ்தான் பிரிவினை, காந்தியார் படுகொலை, இந்தித் திணிப்பு, இந்தி வழியே சமஸ்கிருத கலாச்சாரம், வேத ஆகமம் வழியே சமூகப் பிரிவினை, ஏற்றத்தாழ்வு, தீண்டாமை, பெண்ணடிமை, குடி, கொலை, கொள்ளை, இனப் படுகொலை எல்லாம் அவர்களுக்குச் சாதாரணம்.

1925 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப் பட்ட அமைப்பான ஆர்.எஸ்.எஸ்க்கு மிகப்பெரிய இலக்கெல்லாம் ஒன்றுமில்லை. மேற்கண்ட சமூகவிரோத செயல்களைப் பாதுகாப்பதன் மூலமாகவே தங்கள் ஆரிய மேலாதிக்கத்தைப் பாதுகாக்க முடியும் என்பதுதான். அதாவது, மகாத்மாவே ஆனாலும், சித்பவன் பார்ப்பனரான திலகரின் சவம் கிடத்தப்பட்ட பாடையைத் தொட முடியாது என்கிற தங்கள் தனித்தன்மையைக் காப்பாற்றுவதற்காகவே தொடங்கப்பட்ட ஆர். எஸ்.எஸ் அமைப்பில் அரசாங்க ஊழியர்களாக இருப்போர் இணையக் கூடாது என்றிருந்த முந்தைய சட்டத்தை விலக்கி ஒட்டுமொத்த அரசையும் ஆர். எஸ். எஸ் அமைப்பிற்கு அடிமைசாசனம் எழுதிக் கொடுக்கத் துணிந்திருக்கிறது நரேந்திரர் தலைமையிலான பாஜக அரசு.

இளைஞர்களே எச்சரிக்கை! இதுவரை அரசு ஊழியர்களுக்குள் ஆர்.எஸ்.எஸ் ஊடுருவி இருந்தது. இனி அரசாங்கமாகவே ஆர்.எஸ்.எஸ் தான் இருக்கும் என்கிறார் நரேந்திரர். என்ன செய்யப் போகிறோம் என்பதுதான் நம்முன் உள்ள கேள்வி, சிந்திப்போம்!! ●

# தமிழ்நாட்டை ‘ஓரம்’ கட்டும்

# 2024-25 ஒன்றிய நிதி நிலை அறிக்கை!

சாரதாதேவி

தேர்தலுக்கு முன்பு, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த இடைக்கால நிதி நிலை அறிக்கையிலாவது தமிழ் இருந்தது. தேர்தலுக்குப் பின்னர், 2024-2025 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் தமிழும் இல்லை, தமிழ்நாடும் இல்லை. தமிழ்நாடு மட்டுமல்ல. பீகார், ஆந்திரா தவிர ஒரு பேச்சுக்கு அசாம், மேற்கு வங்கம் தவிர மற்ற எந்த மாநிலங்களின் பெயர்களும் அறிக்கையில் இடம் பெறவில்லை. தேர்தலுக்குப் பிறகு தமிழ்மொழி, திருக்குறள் எல்லாமே மோடிக்குக் கசந்து போனதா? என்ன காரணம்? அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கொடுக்கும் அல்வா கூட தமிழர்களுக்கு இனிக்கவில்லை.



எல்லா மாநிலங்களிலும் பலத்த அடி வாங்கி இருக்கிறார்கள். 15 மாநிலங்களில், 75க்கும் மேற்பட்ட தொகுதிகளில், தில்லு முல்லுகளின் வழியாகவே வெற்றி பெற்றிருக்கிறாகள் என்ற சந்தேகத்திற்குத் தீனி போடுகிறது இந்த நிதி நிலை அறிக்கை.

இப்படி வெளிப்படையாகத் தங்கள் அரசியல் கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்திய கட்சி பாரதீய ஜனதா கட்சியாக மட்டுமே இருக்க முடியும். நிதிஷ்குமார், சந்திரபாபு ஆகியோரின் தயவால் ஆட்சி நடப்பதால், அவர்களைக் குளிர்விக்கப் பல மாநிலங்களின் வரிப் பணத்தில் இருந்து பெறப்படும் வருவாயை இரண்டே மாநிலங்களுக்குப் பெரிய அளவிலும், மற்றவர்களுக்கு சட்டைப் பையை வடிவேலு விரித்துக் காட்டும் பாணியில் இருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கை. இதைத் தங்கள் நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ளும் அறிக்கை என்று ராகுல் காந்தி நக்கல் அடித்திருக்கிறார்.

முதலமைச்சர் ஸ்டாலின், இந்த மாதம் 27 அன்று நடக்க இருக்கும் நிதி அயோக் கூட்டத்திற்கு போகப்போவதில்லை என்று அறிவித்து விட்டார். பொங்கி எழுந்திருக்கிறார்கள் எதிர்க்கட்சியினர். மொத்தமாக மம்தாவைத் தவிர எல்லா இ.ந்.தி.யா கூட்டணி முதலமைச்சர்களும் நிதி அயோக் கூட்டத்தைப் புறக்கணிக்க இருக்கிறார்கள். பாராளுமன்றம் போர்க்கோலம் பூண்டிருக்கிறது. எந்த அளவிற்கு என்றால் பிரதமருக்குப் பாதுகாப்பு இல்லை என அச்சப்படும் அளவுக்கு!

எதிர்க்கட்சிகளுக்கும் ஆளுங்கட்சிக்கும் இடையே ஒரு கண்ணாடிச் சுவர் எழுப்பப் பரிந்துரைத்திருக்கிறதாம் பாராளுமன்ற நிருவாகக் குழு.

நிதி நிலை அறிக்கையில் தங்கள் எஜமானர்களுக்கு விசுவாசம் காட்ட மட்டும் மறக்கவில்லை பா.ஜ.க. அந்நிய பெரு நிறுவனங்களின் தொழில் வரி 40% லிருந்து 35% ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. தங்கம் இறக்குமதி வரி குறைக்கப் பட்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை அப்படியே நகலெடுக்கும் விதமாக, வேலை வாய்ப்புடன் இணைத்த ஊக்கத்தொகை அறிவிப்புகள் வந்துள்ளன. அதுபோல பயிற்சிக்கால உதவித்தொகை பற்றிய காங்கிரசு கட்சியின் வாக்குறுதியையும் பா.ஜ.க தன் நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்திருப்பதை முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் வரவேற்றதோடு, இன்னும் பல அம்சங்களைச் சேர்த்து நகல் எடுத்திருக்கலாமே என்று இவரும் நக்கலடித்திருக்கிறார். தி.மு.க அரசின் 'தோழி' திட்டத்தையும் 'சுட்டு' இக்கிறது ஒன்றிய அரசு. பெண்களுக்கான சமூக நலத் திட்டமாக அதை அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ் நாடு அரசு ஏற்கனவே கேட்டிருந்த திட்டங்கள், வெள்ளப் பாதிப்புகள் எவற்றுக்குமே நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. 2021 இல் சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டத் திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூ.63,000/- கோடியே இன்னும் வந்த சேர்ந்தபாடு இல்லை. இந்த அறிக்கையிலும் அது குறித்த எந்த அறிவிப்பும் இல்லை. புதிதாகக் கட்டப்பட இருந்த கோவை, மதுரை மெட்ரோ திட்டங்கள் குறித்து எந்தப் பேச்சும் இல்லை. அவ்வளவு கேலிக் கூத்துகளுக்கு அப்பாலும், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிதி ஒதுக்கீடு இல்லை. தமிழ்நாடு இரண்டாண்டுகளாக வெள்ளக்காடாக மிதந்தும், பல ஆயிரம் கோடிகள் நட்டம் ஏற்பட்டும், பல முறை கேட்டும், பேரிடர் சிறப்பு நிதியாக ஒரு ரூபாய் கூட ஒன்றிய அரசு இந்த ஆண்டும் ஒதுக்கவில்லை.

மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களைச் சுரண்டிக் கொண்டு, தங்களுக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்று வேற்றுமையைக் காட்டி நிதிப் பங்கீட்டிலும் ஒன்றிய அரசு விளையாடுவது நாட்டின் குடிமைச் சமூக அமைதியை சீர்குலைக்கும்.

கார்கே சொல்வதுபோல இது நிதிநிலை அறிக்கை இல்லை. ஒருவரின் நாற்காலிக்காக இருவருக்கான அறிக்கை இது! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian